**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : ரோஷ்ணா காசிம்**

**நாள்: 28.07.2024 நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

பாரீஸ் ஒலிம்பிக்கில் மூவர்ண கொடியை பறக்க விடும் இந்தியர்களுக்கு சியர் ஃபார் பாரத் மூலம் ஆதரவு அளிப்போம் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குவாட் மாநாட பங்கேற்பதற்காக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று ஜப்பான் சென்றுள்ளார்.

*மன் கீ பாத்* 1 (17)

பாரீஸ் ஒலிம்பிக்கில் மூவர்ண கொடியை பறக்க விடும் இந்தியர்களுக்கு சியர் ஃபார் பாரத் மூலம் ஆதரவு

அளிப்போம் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பான மனதின் குரல் நிகழ்ச்சியின் 112 ஆவது அத்தியாயத்தில் நாட்டு மக்களுடன் உரையாற்றினார். அவர் தமது உரையில், வீடுகள் தோறும் மூவர்ண கொடி ஏற்றும் வரை பல்வேறு விஷயங்களை பகிர்ந்து கொண்டார். இது 3 ஆவது முறையாக பிரதமர் திரு நரேந்திர மோடி பதவி ஏற்ற பிறகு ஒலிபரப்பப்படும் 2 ஆவது அத்தியாயம் ஆகும். இதில், ஒலிம்பிக் முதல் மாணவர்கள் உடனான கலந்துரையாடல் வரை பல்வேறு செய்திகளை அவர் பகிர்ந்து கொண்டார். பாரீஸ் ஒலிம்பி போட்டிகள் தொடங்கி உள்ள நிலையில், உலக அரங்கில் நமது மூவர்ண கொடியை பெருமையுடன் பறக்க விடும் இந்தியர்களுக்கு சியர் ஃபார் பாரத் மூலம் நாம் அனைவரும் ஆதரவு அளிப்பது அவசியம் என்றும்

அவர் குறிப்பிட்டார். சில நாட்களுக்கு முன்பாக கணித உலகிலும் கூட ஒரு ஒலிம்பிக் நடந்தேறியதாக குறிப்பிட்ட பிரதமர், சர்வதேச கணித ஒலிம்பியாட்டிலே பாரதத்தின் மாணவர்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டார்கள் என கூறினார். இதில், நமது சிறப்பான செயல்பாடு



காரணமாக 4 தங்க பதக்கமும், ஒரு வெள்ளி பதக்கமும் கிடைத்தன என தெரிவித்தார். சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் இளைஞர்கள் பங்கெடுத்துக் கொண்ட நிலையில், இந்திய அணி சிறந்த 5 அணியில் ஒன்றாக வெற்றிகரமாக திகழ்ந்ததை பிரதமர் சுட்டிக்காட்டினார். பின்னர், அதில் கலந்து கொண்ட மாணவர்களுடன் பிரதமர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களது

அனுபவங்கள் குறித்து பேசினார். அசாம் மாநிலத்தில் உள்ள சராயுதேவு மைதாம் யுனஸ்கோ மரபு சின்ன பட்டியலில் இடம் பெற உள்ளதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார். இந்த இடம் அஹோம் அரசு பரம்பரையின் தலைநகரமாக திகழ்ந்ததையும் பிரதமர் நினைவு கூர்ந்தார். தன்னுடைய கலாச்சாரத்தின் மீது பெருமிதம் கொள்ளும் தேசத்தால் மட்டுமே முன்னேற முடியும் என்பதை அடிப்படையாக கொண்டு, சாலையோரங்கள் மற்றும் சுவர்களின் மீதும் சுரங்கப் பாதைகளிலும் மிக அழகான ஓவியங்கள் வரையப்பட்டு, கலாச்சாரத்தை பிரபலப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதை பிரதமர் குறிப்பிட்டார். எடுத்துக்காட்டாக, புதுடெல்லியின் பாரத் மண்டபத்தில் நாடு முழுவதிலும் இருந்து அற்புதமான கலை படைப்புகள் இடம்

பெற்றிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். காதி கிராம பவனில் வியாபாரம் ஒன்னரை லட்சம்

*மன் கீ பாத்* 3 (18)

கோடி ரூபாயை தாண்டியிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித் பிரதமர், அனைவரும் கதராடை வாங்கி அணிய வேண்டும் என்றும், நமது சுதந்திரத்தோடு தொடர்புடைய, வரும் ஆகஸ்ட் மாதம் 7 ஆம் தேதி கைத்தறி தினத்தை நாம் கொண்டாட இருப்பதாகவும், அன்றைய தினம் அதற்கு பொருத்தமானதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். இளைய தலைமுறையினர் போதை பொருள் பழக்கத்திற்கு அடிமையாவதை தடுக்கும் வகையில் அரசு சார்பில் சிறப்பு மையங்கள் திறக்கப்பட்டு உள்ளதையும் அவர் நினைவு கூர்ந்தார். போதை பொருட்களுக்கு எதிரான இந்த போரில் அனைவரும்

பங்கு பெற வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார். இதற்கென போதை பொருள் கட்டுப்பாட்டு அலுவலகம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவற்றில் உள்ள உதவி எண்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். புலிகள் நமது கலாச்சாரத்தோடு பிரிக்க முடியாத ஐக்கியமாகி விட்டது என்றும், நாளை உலகம் முழுவதும் புலிகள் தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில், புலிகளின் பாதுகாப்பிற்காக இதுவரை இல்லாத அளவிற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் அவர் சுட்டிக் காட்டினார். இது போன்ற முயற்சிகளின் காரணமாகவே உலகம் முழுவதும் உள்ள புலிகளின்

*மன் கீ பாத்* 4 (16)

எண்ணிக்கையில் 70 சதவிகித புலிகள் இந்தியாவில் இருப்பதை பிரதமர் பெருமிதத்துடன் தெரிவித்தார். அன்னையின் பெயரில் ஒரு மரம் வளர்ப்போம் என்ற இயக்கத்தின்படி இந்தூரில் ஒரே நாளில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டதை பிரதமர் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

இந்த இயக்கத்தோடு இணையும் போது நமது தாய் மற்றும் பூமித்தாய் என இருவருக்கும் விசேஷமான ஒன்றை செய்வதை போன்று நாம் உணர்வோம் என்றும் பிரதமர் தெரிவித்தார். கடந்த சில ஆண்டுகளாக வீடுகள் தோறும் மூவர்ண கொடியை ஏற்றும் இயக்கம் வெற்றியடைந்து வருவதாகவும், அந்த வரிசையில் இந்த ஆண்டும் வீடுகளில் மூவர்ண கொடியோடு உங்களின் சுய புகைப்படத்தையும் சேர்த்து harghartiranga.com என்ற

மின்னஞ்சலில் பதிவேற்றம் செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், வரும் ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்கு முன்பாக கடிதங்கள் மற்றும் மை கவ் மற்றும் நமோ ஆப் செயலி வழியாக மக்கள் அளிக்கும் ஆலோசனைகளை தமது சுதந்திர தின உரையில் தெரிவிக்க விரும்புவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது உரையில்



குறிப்பிட்டுள்ளார். மேலும், தேசத்தின் புதிய சாதனைகளோடு மக்களின் புதிய முயற்சியோடு மனதின் குரலுக்காக ஆலோசனைகளை கண்டிப்பாக அனுப்ப வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். எதிர்வரும் அனைத்து பண்டிகைகளுக்கும் தமது நல்வாழ்த்துக்களை அவர் கூறினார்.

ஜெய்சங்கர் (12)

குவாட் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஜப்பான் சென்றுள்ளார். ஜப்பான் நாட்டின் இடோகாவில் தேசப்பிதா மகாத்மா காந்தியின் சிலையை அவர் திறந்து வைத்தார். முன்னதாக, அவர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு ஆண்டனி பிளிங்களை இன்று சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின் போது, பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சனைகள் குறித்து அவர்கள் ஆலோசனை நடத்தினர். இது தொடர்பாக டாக்டர் ஜெய்சங்கர் தமது எக்ஸ் தள பதிவில், இரு தரப்பு உறவுகள் சீராக இருப்பதாகவும், நாளை டோக்கியோவில் நடைபெறும் குவாட் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்ற தாம் ஆவலுடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இம்மாநாட்டில், இந்தியா, ஜப்பான்,

அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் பங்கேற்க உள்ளன.

ஜிதேந்திர சிங்(15)

மத்திய அறிவியல் மற்றும் தொழில் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கிற்கு இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நீரிழிவு மருத்துவம், நீரிழிவு பராமரிப்பு, நீரிழிவு ஆராய்ச்சி ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டமைக்காக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இந்த விருதை நீரிழிவு மைய அறக்கட்டளை தலைவர் டாக்டர் மோகன் வழங்கினார். நிகழ்ச்சியில் பேசிய அவர், பேராசிரியர், ஆராய்ச்சியாளர், நீரிழிவு நோயியல் நிபுணர் என பன்நோக்கு தன்மையுடன் டாக்டர் ஜிதேந்திர சிங் உயர்ந்துள்ளதாக குறிப்பிட்டார்.

அவர் நீரிழிவு நோயின் பல்வேறு அம்சங்கள் குறித்து 8 புத்தகங்களை எழுதி இருப்பதாகவும் குறிப்பிட்டார். இந்த விருது தமக்கு கிடைத்தது தொடர்பாக டாக்டர் ஜிதேந்திர சிங் கூறுகையில், இந்த விருது தமக்கு கிடைத்த மிகப் பெரிய கௌரவம் என்றும், மிகுந்த அடக்கத்துடனும், பணிவுடனும் இந்த விருதை ஏற்றுக் கொள்வதாக கூறினார். தமது 40 ஆண்டு கால பயணத்தில் நாட்டின் மிக உயர்ந்த மருத்துவ நிபுணர்களை சந்தித்து புகழ் பெற்றவர்களுடன் பணியாற்றி இருப்பது தெய்வீக ஆசிர்வாதம் என்றும் அவர் தெரிவித்தார்.

சோமண்ணா 1(18)

மத்திய ரயில்வேத் துறை இணையமைச்சர் திரு சோமண்ணா இன்று புதுச்சேரி ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, சிசிடிவி அறை, ரயில்வே நிலையத்தில் நடைபெறும் பணிகள் ஆகியவற்றை அவர் பார்வையிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதுச்சேரி ரயில் நிலையத்தை மாதிரி ரயில் நிலையமாக மாற்றும் பணிகள் இன்னும் ஓராண்டுக்குள் முடிவடையும் என்று தெரிவித்தார். ரயில் நிலையம் தூய்மையாக உள்ளதற்கு அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். மத்திய அரசு ரயில்வே துறைக்கு முக்கியத்துவம் அளித்ததன் காரணமாக கடந்த 10 ஆண்டுகளில் ரயில்வேத் துறை பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, பாஜக தலைமை அலுவலம் சென்ற அவர், செய்தியாளர்களிடம் பேசினார். புதுச்சேரியில் ரயில்வே மேம்பாடு தொடர்பாக கவனம் செலுத்துவோம் என்றும், வேளாண் துறை, சுற்றுலா, கல்வி என பல்வேறு துறைகளில் புதுச்சேரிக்கு 148 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், கர்நாடக மாநிலத்திற்கு கிடைக்கும் திட்டங்கள் போன்றே புதுச்சேரிக்கும் கிடைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார். குறிப்பாக புதுச்சேரி-வில்லியனூர்-திண்டிவனம் ரயில் பாதை திட்டம் 740 கோடி ரூபாய்

சோமண்ணா 2()

செலவில் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். புதுச்சேரி ஏஎப்டி மில் அருகே 75 கோடி ரூபாய் செலவில் 4 வழி மேம்பாலம் அமைக்க வரும் ஆகஸ்ட் மாதம் 24 ஆம்

தேதி ஒப்பந்தம் கோரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். புதுச்சேரி-கடலூர் ரயில் பாதை திட்டத்தின் சர்வே பணிகள் நடந்து வருவதாகவும், அப்பணிகள் முடிந்ததும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். இந்த செய்தியாளர்கள் சந்திப்பின் போது, மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், மக்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, புதுச்சேரி பாஜக மேலிட பொறுப்பாளர் திரு நிர்மல் குமார் சுராணா ஆகியோர் உடனிருந்தனர்.

ஆளுநர்கள் மாற்றம் (15)

8 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களுக்கு புதிய ஆளுநர்களை நியமித்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு உத்தரவிட்டுள்ளார். இதன்படி, ஜார்கண்ட் மாநில ஆளுநராக இருந்த திரு சிபி இராதாகிருஷ்ணன் மகராஷ்டிரா மாநிலத்திற்கு ஆளுநராக மாற்றப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக முன்னாள் மத்திய அமைச்சர் திரு சந்தோஷ் குமார் கங்குவா நியமிக்கப் பட்டுள்ளார். புதுச்சேரி துணை நிலை ஆளுநராக முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி திரு கைலாசநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். பஞ்சாப் மாநில ஆளுநராக திரு குலாப் சந்த் கட்டாரியாவும், சிக்கிம் மாநில ஆளுநராக திரு லட்சுமன் பிரசாத் ஆச்சாரியாவும், ராஜஸ்தான் மாநில ஆளுநராக, மகராஷ்டிர மாநில முன்னாள் சட்டப் பேரவை தலைவர் திரு ஹரிபாவ் கிஷன் ராவ் பாக்டே

நியமிக்கப்பட்டுள்ளார். சத்தீஷ்கர் மாநில ஆளுநராக திரு ராமன் தேகாவும், மேகாலயா மாநில ஆளுநராக திரு விஜயசங்கரும், தெலங்கானா மாநில ஆளுநராக திரு ஜிஷ்னு தேவ் சர்மாவும், சிக்கிம் மாநில ஆளுநராக திரு ஓம் பிரகாஷ் மாத்தூரும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஒலிம்பிக் (4)

பிரான்ஸ் நாட்டின் பாரீஸ் நகரில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் முன்னனி துப்பாக்கி சுடும் வீராங்கனை மானு பாக்கர் பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டர் இறுதி போட்டியில் இன்று வெண்கல பதக்கம் வென்றுள்ளார். அவருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

போதை விழிப்புணர்வு (7)

புதுச்சேரியில், போதை பொருள் விழிப்புணர்வை வலியுறுத்தி இன்று கடற்கரை காந்தி திடலில் காவல் துறை மற்றும் தொழில் முனைவோர் சார்பில் மராத்தான் போட்டி நடைபெற்றது. இப்போட்டியை முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு நார சைதன்யா, காவல் கண்காணிப்பாளர் லட்சுமி சௌஜன்யா ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்த மராத்தான் ஓட்டம் புதுச்சேரி காந்தி சிலையில் புறப்பட்டு பட்டேல் சாலை, காந்தி வீதி வழியாக மீண்டும் கடற்கரை சாலையை வந்து சேர்ந்தது.